அவர்களின் உத்தரவைப் பெற்று வந்தவாசியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன் அவர்கள்.

திரு. வே. குணசீலன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழையெளிய மக்கள் போற்றிடும் முத்தான திட்டங்களைத் தந்து, வல்லரசு பெற்றிட நல்லரசு தந்த, தங்கத் தலைவி மாண்புமிகு இதய தெய்வம் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய வந்தவாசி தொகுதியிலிருந்து இராமேஸ்வரத்திற்கு பேருந்து இயக்க அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 62, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

62—

24 மணிநேர மருத்துவமனை

***24753—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, திருவெண்காடு ஆரம்ப சுகாதார நிலையத்தை 24 மணி நேர மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன்.

[2014 பிப்ரவரி 17

(அ) மற்றும் (ஆ) நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி சட்டமன்றத் தொகுதி, சீர்காழி ஊராட்சி ஒன்றியம், திருவெண்காடு பிரதான ஆரம்ப சுகாதார நிலையம், ஏற்கெனவே தரம் உயர்த்தப்பட்டு, 24 மணிநேரமும் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்மா, சங்கத் தமிழ் பூமி தந்த சத்தியத் தாயே, செயற்கரிய செயல் யாவும் செய்து முடிக்கும் எங்கள் செந்தமிழ் சேகுவாராவே செந்தமிழர் சீதனமாம் சேலை கட்டிய நேதாஜியே, தமிழகத்தில் இருந்துதான் தாய்நாட்டுக்கு புத்தொளி தோன்றும் என வீரத் துறவி விவேகானந்தர் விளம்பிய சத்தியத்தை சாதித்துக்காட்டிய சந்தியா தாய் ஈன்ற சரித்திரமே, தாயின் பாதத்தின் கீழ்தான் சொர்க்கம் என்றுரைத்த நபிகளின் நல்லுரைக்கு வடிவம் தரும் வல்லமையே, முண்டாசுக் கவிஞன் சொன்ன முழுதான இலக்கணத்தை பழுதின்றிக் கொண்டே பார் வியக்கும் புதுமைப் பெண்ணே, அம்மா, பாரதம் இனி உங்கள் பின்னே உண்ணாமல் உழைத்து உறங்காமல் விழித்து, இந்த மண்ணாளும் மாதரசி மாண்புமிகு தமிழ்நாட்டினுடைய முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புனித பொற்பாதங்களை வணங்குகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவெண்காடு அரசு ஆரம்ப சுகாதார நிலையம்மூலம் சுமார் ஒரு இலட்சத்து இருபதாயிரம் மக்கள் பயன்பெறுகின்றார்கள். சுனாமியால் பாதிக்கப்பட்ட கடலோர மீனவப் பகுதிகள் அங்கு அதிகம் இருப்பதனால் ஒரு நாளைக்கு சுமார் 400 முதல் 500 நோயாளிகள் சிகிச்சை பெறுகிறார்கள். நம்முடைய இதய தெய்வம் மாண்புமிகு தமிழ்நாட்டின் முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, மிகச்

2014 பிப்ரவரி 17]

சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கின்ற அந்த மருத்துவமனைக்கு, குடும்ப நல அறுவைச் சிகிச்சை அரங்கிற்கு புதிய கட்டடமும், தாய்-சேய் நல புதிய கட்டடமும், புற நோயாளிகளின் வசதிக்காக புதிய கட்டடமும் கட்டித் தர மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு டாக்டர் சி. விஜயபாஸ்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நோய் கண்ட மக்களின் நலனுக்காக தாய் கண்ட நல்ல திட்டம்தான் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தை 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாகத் தரம் உயர்த்துகின்ற அற்புதமான திட்டம். உறுப்பினர் குறிப்பிடுகின்ற திருவெண்காடு சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட மருத்துவமனையாக மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது. தற்பொழுது, உறுப்பினர் கோரியிருக்கின்ற மகப்பேறு கட்டடங்கள், பார்வையாளர் கூடம், குடும்ப நல அறுவை அரங்கம் ஆகியவை குறித்து உரிய கருத்துரு துறையின் மூலமாக பெறப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

திருமதி ம. சக்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.